# இயேசுவே வாரும்

ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும். வெளி. 22:20.

சகோ.காலேப் யோசுவா,
Tele. 04630 456157

" ஓரேப் "
திருவைகுண்டம் - 628 601,
தூத்துக்குடி மாவட்டம்.

## கால்களைக் கழுவுதல்
## ( FEET WASHING )

1. தேவனுடையச் சித்தத்தினாலே கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகச் சுவிசேஷகனாக ஏற்படுத்தப்பட்டவனாகிய நான்; தேவனுடையச் சபைக்கும், எனக்கும், உங்களுக்கும் ஆண்டவராயிருக்கிற நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தை எங்கும் தொழுதுக்கொள்ளுகிற அனைவருக்கும் எழுதுகிறதாவது :

நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

2. கர்த்தர் மூன்று தெய்வீக நியமங்களை ஆவிக்குரிய இஸ்ரவேலராகிய நாம் சரீரப் பிரகாரமாக ஆசரிக்க நியமித்துள்ளார். அவையாவன :

அ. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் தண்ணீரில் முழுக்கு ஞானஸ்நானம். மத். 28:19 , அப். 2:38.
ஆ. கர்த்தருடைய இராப்போஜனம். யோ. 6:48-50 , 1கொரி. 11:17-34.
இ. கால்களைக் கழுவுதல். யோ. 13:2-17.

இந்த இதழில் **கால்களைக் கழுவுதல்** நியமம் குறித்து உங்களுக்கு எழுதி உணர்த்த விரும்புகிறேன்.

3. **மூன்று பரிபூரணத்துக்கு எடுத்துக்காட்டு. நியமங்கள் என்பது அதிகாரமுடைய ஒருவரால், அவருடைய ஆளுகைக்குட்பட்டவர்கள் ஆசரிக்கும்படிக்கு கொடுக்கப்பட்ட கட்டளையாகும்.** மேற்கூறிய மூன்று நியமங்களும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் கொடுக்கப்பட்டவைகளாகும். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறவன் இந்த மூன்று நியமங்களையும் ஆசரிக்கவேண்டும். அதோடு மட்டுமல்ல, அவைகளை அதினதின் முறைமைகளின்படியே ஆசரிக்கவேண்டும். இதை ஆசரிக்கலாம், இதை ஆசரியாமலும் இருக்கலாம்; இதை இப்படியும் ஆசரிக்கலாம், அப்படியும் ஆசரிக்கலாம் என்ற பேச்சுக்கு இடமில்லை. ஒவ்வொன்றும் அதனதன் ஒழுங்குகளின்படியும், கிரமங்களின்படியும், முறைமைகளின்படியும் ஆசரிக்கப்படவேண்டும்.

4. புதிய ஏற்பாட்டின் நான்கு சுவிசேஷகர்களாகிய மத்தேயு, மாற்கு, லூக்கா மற்றும் யோவான் ஆகியோர்கள் கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தை தேவஆவியினால் ஏவப்பட்டு எழுதினார்கள். இவர்களில் யோவான் மட்டும் **கால்களைக் கழுவுதல்** நியமம் குறித்து கீழ்க்கண்டவாறு எழுதுகிறான்.

- சீமோனின் குமாரனாகிய யூதாஸ்காரியோத்து அவரைக் காட்டிக் கொடுக்கும்படி பிசாசானவன் அவன் இருதயத்தைத் தூண்டினபின்பு, அவர்கள் போஜனம் பண்ணிக்கொண்டிருக்கையில், தம்முடைய கையில் பிதா எல்லாவற்றையும் ஒப்புக்கொடுத்தாரென்பதையும், தாம் தேவனிடத்திலிருந்து வந்ததையும், தேவனிடத்திற்குப் போகிறதையும் இயேசு அறிந்து;
- போஜனத்தை விட்டெழுந்து, வஸ்திரங்களைக் கழற்றி வைத்து, ஒரு சீலையை எடுத்து, அரையிலே கட்டிக்கொண்டு; பின்பு பாத்திரத்தில் தண்ணீர் வார்த்து, சீஷருடைய கால்களைக் கழுவவும், தாம் கட்டிக்கொண்டிருந்த சீலையினால் துடைக்கவும் தொடங்கினார்.
- அவர் சீமோன் பேதுருவினிடத்தில் வந்தபோது, அவன் அவரை நோக்கி; ஆண்டவரே, நீர் என் கால்களைக் கழுவலாமா என்றான்.
- இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக : நான் செய்கிறது இன்னதென்று இப்பொழுது நீ அறியாய், இனிமேல் அறிவாய் என்றார்.
- பேதுரு அவரை நோக்கி; நீர் ஒருக்காலும் என் கால்களைக் கழுவப்படாது என்றான். இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக : நான் உன்னைக் கழுவாவிட்டால் என்னிடத்தில் உனக்குப் பங்கில்லை என்றார். அதற்குச் சீமோன் பேதுரு : ஆண்டவரே, என் கால்களை மாத்திரமல்ல, என் கைகளையும், என் தலையையும் கூடக் கழுவவேண்டும் என்றான்.
- இயேசு அவனை நோக்கி : முழுகினவன் தன் கால்களை மாத்திரம் கழுவவேண்டியதாயிருக்கும்; மற்றபடி அவன் முழுவதும் சுத்தமாயிருக்கிறான்; நீங்களும் சுத்தமாயிருக்கிறீர்கள்; ஆகிலும் எல்லாரும் அல்ல என்றார்.
- தம்மைக் காட்டிக்கொடுக்கிறவனை அவர் அறிந்திருந்தபடியினால் நீங்களெல்லாரும் சுத்தமுள்ளவர்கள் அல்ல என்றார்.

- அவர்களுடைய கால்களை அவர் கழுவின பின்பு : தம்முடைய வஸ்திரங்களைத் தரித்துக்கொண்டு, திரும்ப உட்கார்ந்து, அவர்களை நோக்கி : நான் உங்களுக்குச் செய்ததை அறிந்திருக்கிறீர்களா?
- நீங்கள் என்னைப் போதகரென்றும், ஆண்டவரென்றும் சொல்லுகிறீர்கள்; நீங்கள் சொல்லுகிறது சரியே; நான் அவர்தான்.
- ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால்; நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள்.
- நான் உங்களுக்குச் செய்ததுபோல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன்.
- மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்ல, அனுப்பப்பட்டவன் தன்னை அனுப்பினவரிலும் பெரியவனல்ல.
- நீங்கள் இவைகளை அறிந்திருக்கிறபடியினால், இவைகளைச் செய்வீர்களானால், பாக்கியவான்களாயிருப்பீர்கள். யோ. 13:2-17.

5. இக்காலத்துக்குரிய செய்தியில் இருக்கிறோம் என்பவர்கள் மத்தியில் விசுவாசிகள், அவிசுவாசிகள், பாவனை விசுவாசிகள் என்ற மூவகை விசுவாசிகள், மேலும் கள்ள கபடமுள்ள வேலையாட்கள், ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்த ஊழியக்காரர்கள் காணப்படுவதால் **கால்களைக் கழுவுதல்** நியமத்தை ஆசரிப்பதில் ஒருமனப்பாடு இல்லாமல் பற்பல முறைமைகள், அவரவர்கள் மனம்போன போக்கில் கையாளப்பட்டு எங்கும் ஒழுங்கின்மை காணப்பட்டுச் செய்தி தூஷிக்கப்படுகிறது. இரட்சிக்கப்பட்டு கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறோம் எனக் கூறிக் கொண்டு, தெய்வீக நியமங்களை கைக்கொள்வதிலும், ஆசரிப்பதிலும் நம்மில் ஒவ்வொருவரும் அவரவர் மனம்போன போக்கில் நடந்துகொண்டு நம்முடைய கிரியைகளின் மூலம் கிறிஸ்துவுக்கு அவமானத்தைக் கொண்டு வருகிறோம். அவ்வாறாகவே லவோதிக்கேயா சபைக்கு அதன் தூதன் மூலம் கர்த்தர் சபைக்குக் கொடுத்தச் செய்தியில் உறுதியாக நிற்கிறோம் எனக் கூறிக்கொண்டுச் செய்திக்குப் புறம்பாக, கிரியைகள் நடப்பித்து அதன் மூலமாகவும் கிறிஸ்துவுக்கு அவமானத்தைக் கொண்டுவருகிறோம். செய்தியில் இருக்கிறோம் என்று கூறிக் கொண்டே கோதுமைக்குள் களைகளை விதைக்கிற ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்த கள்ள கபடமுள்ள வேலையாட்கள் நம் மத்தியில் அநேகர் உண்டு என்பதை ஆவிக்குரியவர்கள் நன்கு அறிவார்கள். ஆதலால் **கால்களைக் கழுவுதல்** நியமம் குறித்து அதன் ஒழுங்கு முறைமைகளை விசுவாசிகளுக்கு எழுதி உணர்த்துவது சுவிசேஷகனாகிய எனக்கு மிக்க அவசியமாய்க் கண்டது.

6. **கால்களைக் கழுவுதல்** நியமத்தை இயேசு கிறிஸ்து, கர்த்தருடைய இராப்போஜனம் முடிவில் ஆரம்பித்து வைத்து, அதை ஆசரிக்கவும் செய்தார். யோ. 13:5. இயேசு தம்முடைய பூவுல வாழ்க்கையில் கடைசியாய்ச் செய்த செயல்களில் ஒன்று ஒரு அடிமைப்போல் அரையில் சீலையைக் கட்டிக்கொண்டு சீஷர்களுடைய கால்களைக் கழுவித் துடைத்ததாகும்.

7. **கால்களைக் கழுவுதல்** குறித்து பற்பல உபதேசங்கள் உண்டு. அவைகளில் ஒன்று, பாலஸ்தீன ரோடுகள் சமமாக இல்லாமல், மேடும் பள்ளமுமாயிருக்கும். மேலும் சுத்தமாகவும் இராது. வேயில் காலங்களில் ரோட்டின்மேல் புழுதி பல அங்குலங்கள் படிந்திருக்கும். மழைக் காலத்தில் ரோட்டின்மேல் உள்ள புழுதியினால் ரோடு சகதியாகக் காணப்படும். இதனால் வீட்டுவாசல்களில் எப்பொழுதும் பெரிய தொட்டிகளில் தண்ணீர் இருக்கும். பணவசதியுள்ளவர்கள் வீட்டின் வேலையாட்கள், வீட்டிற்கு வருகிறவர்களுடைய கால்களைக் கழுவி, பின் கால்களைத் துண்டுகளினால் துடைத்து உபசரிப்பார்கள். இயேசுவும் அவருடைய சீஷர்களும் எளிமையான வாழ்க்கை வாழ்ந்ததினால் அவர்கள் கால்களைக் கழுவ, துடைக்க எந்தவிதமான வேலையாட்களும் கிடையாது. ஆதலால் இயேசுவும், அவருடைய சீஷர்களும் தங்களுக்குள்ளே ஒருவருடைய கால்களை ஒருவர் அவர்களுக்குள்ளே கழுவிக்கொள்வார்கள்.

8. ஒருநாள் சீஷர்களுக்குள்ளே தங்களுக்குள் யார் பெரியனாயிருப்பான் என்ற வாக்குவாதம் உண்டாயிற்று. இதை அறிந்த இயேசு உங்களில் பெரியவன் சிறியவனைப் போலவும், தலைவன் பணிவிடைக்காரனைப் போலவும் இருக்கக்கடவன் என்று போதித்தார். லூக். 22:24-27.

9. பஸ்கா பண்டிகைக்கு முந்தின நாள் இயேசு தம்முடைய சீஷர்களுடன் இரவு ஆகாரத்திற்காக உட்கார்ந்திருந்தார். அப்பொழுது சீஷர்கள் ஒருவருடையக் கால்களை ஒருவர் கழுவாமல் பந்தியில் உட்கார்ந்து விட்டனர். ஒருவருடையக் கால்களை மற்றொருவர் கழுவ முன்வரவில்லை. ஆதலால் இயேசுதாமே இந்த விருந்தோம்பல் செயலை சாப்பிட்டுக் கொண்டிருக்கும் வேளையில் ஆரம்பித்தார். மேலும் லூக். 22ம் அதி. யில் தான் கூறியதைச் செய்து முன்மாதிரியாக இருந்தார் எனக் கூறுகிறார்கள்.

10. சீஷர்களுடைய கால்களைக் கழுவ பணியாட்கள் இல்லாவிட்டால், அவரவர் கால்களை அவரவர் கழுவிச் சுத்தப்படுத்திக் கொள்ளலாமே. ஏன் ஒருவர் கால்களை மற்றொருவர் கழுவவேண்டும்? இயேசுவுக்கு போஜனப்பந்திக்கு முன்பே, சீஷர்கள் தங்கள் கால்களைக் கழுவவில்லை எனத்தெரியாதா? பந்தி வேளையில்தான் அதை அறிந்து, உடனே அவர்கள் கால்களைக் கழுவச்செல்லவேண்டுமா? இந்த உபதேசம் தேவனுடைய வார்த்தைக்கு முற்றிலும் முரண்பாடானதே.

11. மற்றொரு பிரிவினர் **கால்களைக் கழுவுதல்** மாயமான தாழ்மை. உண்மையான தாழ்மை நமது மனதில் இருந்தால் போதும். ஆதலால் கால்களைக் கழுவுதல் தேவையில்லை என்கிறார்கள். உண்மையான மனந்திரும்புதல் என் உள்ளத்தில் உள்ளது, தேவன் என் உள்ளத்தைப் பார்க்கிறார், ஆதலால் நான் மனந்திரும்பி பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம்பெறத் தேவையில்லை எனக் கூறலாமா? நான் என் உள்ளத்தில் இயேசு கிறிஸ்துவின் பாடு, மரணத்தை நினைவு கூறுகிறேன். பின் நான் ஏன் கர்த்தருடைய இராப்போஜனத்தை ஆசரிக்கவேண்டும் எனக்கூறலாமா? கூடாதே. ஏனென்றால் அவைகள் தெய்வீக நியமங்கள் ஆகும். அவ்வாறாகவே உண்மையான தாழ்மை எனது உள்ளத்தில் உண்டு, ஆதலால் **கால்களைக் கழுவுதல்** தேவையில்லை எனக்கூறக்கூடாது. இது மனுஷர்களுடைய கற்பனைகள் ஆகும்.

12. இதேப் பாணியில்தான் இந்நாட்களில் சிலர் நாங்கள் எடுத்துக்கொள்ளப்படுதல் 1963ல் நடந்துவிட்டது என விசுவாசிக்கிறோம், ஆனால் அது எங்கள் உள்ளத்தில் 2000ல் தான் நிகழ்ந்தது. இனி அது பிரத்தியட்சமாக நிகழப்போகும் நாளை எதிர்நோக்கிக்கொண்டிருக்கிறோம். இப்பொழுது நான் மணி அல்ல, நான் கிறிஸ்து. இப்பொழுது நான் ஜெயராஜ் அல்ல, நான் கிறிஸ்து எனக் கூறிக்கொண்டு இனி எங்களுக்கு ஞானஸ்நானம், கர்த்தருடைய இராப்போஜனம், கால்களைக் கழுவுதல், சபை பக்திவிருத்திக்கான ஐந்துவகை ஊழியங்கள் தேவையில்லை எனக் கூறிக்கொண்டு தங்களைத் தாங்களே கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

13. **கால்களைக் கழுவுதல்** நியமம் தேவையில்லை என்பதைக் குறித்து தேவனுடைய வார்த்தை என்ன கூறுகிறது? மனுஷருக்குக் கீழ்ப்படிவதைப் பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்ப்படிவதே அவசியமாயிருக்கிறது. அப். 5:29. மேலும், ஜென்மசுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான்; அவைகள் அவனுக்குப் பைத்தியமாய்த் தோன்றும்; அவைகள் ஆவிக்கேற்றப் பிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளாதலால், அவைகளை அறியவும் மாட்டான். ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான். 1கொரி. 2:14,15. இயேசு நான் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ள உபதேசம் பண்ணுங்கள் என்று மத். 28:20ல் கூறியுள்ளதாலும், மேலும் நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள் என யோ. 14:15ல் கூறுவதால்; அவர் கட்டளையிட்ட, ஆசரித்த இந்த நியமத்தை நாமும் மணவாட்டி சபை பிரத்தியட்சமாக எடுத்துக்கொள்ளப்படும் வரை ஆசரிக்கக் கடமைப் பட்டுள்ளோம். அதுவே அவரிடத்தில் அன்பு கூறுவதாகும்.

14. இங்கு நாம் ஆவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளோடு சம்பந்தப்படுத்தி, கால்களைக் கழுவுதலின் முக்கியத்துவத்தை இங்குக் காணலாம். **கால்களைக் கழுவுதல் ஒரு தொண்டாக இருந்தாலும், ஆவிக்குரியவர்களாகிய நமக்கு அது ஒரு தெய்வீக நியமம், சடங்கு, கட்டளையாகும்.**

15. கர்த்தர் மம்ரேயின் சமபூமியிலே ஆபிரகாமுக்கு தரிசனமானபோது, மூன்று புருஷர்களுக்கும் கால்களைக் கழுவத் தண்ணீர் கொடுத்து அவன் அவர்களுக்குத் தொண்டுசெய்தான். ஆதி. 18:4,5. கால்களைக் கழுவத் தண்ணீர் கொடுக்காதது விருந்தோம்பலில் குறைவு என கர்த்தர் தன்னை போஜனத்துக்கு அழைத்த பரிசேயனாகிய சீமோனிடம் கூறினார். லூக். 8:14. லோத், தனக்கு முன் காணப்பட்ட இரு தூதர்களுக்கும் அவர்கள் கால்களைக் கழுவத் தண்ணீர் கொடுத்துத் தொண்டுசெய்தான். ஆதி. 19:2,3. ஆக ஒருவர் கால்களைக் கழுவத் தண்ணீர் கொண்டுவந்துக் கொடுத்து உபசரிப்பது ஒரு விருந்தோம்பல் செயலாகும். மேலும் அது அன்பின் நிமித்தமாக செய்யும் ஒரு பணியாகும்.

16. ஆனால் ஆவிக்குரியவர்களாகிய நமக்கு இது ஒரு தெய்வீகக் கட்டளையாகும். பாருங்கள், ஆரோனும் அவன் குமாரரும் ஆசரிப்புக் கூடாரத்துக்குள் பிரவேசிக்கும்போதும், கர்த்தருக்கு தகனத்தைக் கொளுத்தும்போதும், பலிபீடத்தில் ஆராதனைச் செய்யச்சேரும் போதும் அவர்கள் சாகாதபடிக்கு தண்ணீரினால் தங்களைக் கழுவவேண்டும். யாத். 30:17-21. **அவர்கள் சாகாதபடிக்கு என்று எழுதியிருப்பதினால் இது ஒரு தெய்வீகக் கட்டளையாகும்.**

17. **இவ்வாறாகவே இங்குக் கால்களைக் கழுவுதல் ஒருவர் இஷ்டத்திற்கு விடப்பட்ட தொண்டு இல்லை. மாறாக இது ஒரு தெய்வீகக் கட்டளையாகும். பாருங்கள், நான் உங்களுக்குச் செய்ததுபோல, அதாவது அவர் அவருடைய சீஷர்களுடைய கால்களைக் கழுவினதுபோல, நீங்களும் ஒருவருடையக் கால்களை ஒருவர் கழுவும்படிக்கு உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன் என்றார். யோ. 13:15. ஆதலால் இது ஒருவருடைய விருப்பத்திற்கு விடப்பட்டதல்ல. கட்டாயமான ஒன்றாகும்.**

18. **நமக்குள் ஒருவருக்குமேல் ஒருவருக்குப் பங்கு இருப்பதால் நாம் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவுதல் வேண்டும். ஏனென்றால் நான் உங்களுடைய கால்களைக் கழுவாவிட்டால் என்னிடத்தில் உங்களுக்குப் பங்கில்லை என இயேசு பேதுருவிடம் கூறினார். யோ. 13:8. நாம் யூதராயினும், கிரேக்கராயினும், எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகந்தீர்க்கப்பட்டோம். 1கொரி. 12:13. நாம் அனைவரும் சேர்ந்து கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்தனியே அவயவங்களாயுமிருக்கிறோம். 1கொரி. 12:27. ஆதலால் ஒரு அவயவம் பாடுபட்டால் எல்லா அவயவங்களும் கூடப்பாடுபடும்; ஒரு அவயவம் மகிமைப்பட்டால் எல்லா அவயவங்களும் கூடச் சந்தோஷப் படும். 1கொரி. 12:26. நாம் ஒரே சரீரமாயும் தனித்தனியே அவயவங்களாயுமிருக்கிறபடியால் நமக்கு ஒருவர்மேல் ஒருவருக்குப் பங்கு உண்டு. இந்தப் பங்கை உறுதிப்படுத்தவே நாம் ஒருவருடையக் கால்களை ஒருவர்**

கழுவுகிறோம். ஆதலால் இந்த நியமத்தைக் கடைப்பிடிக்கிறவர்கள் பாக்கியவான்கள். யோ.13:17. கேட்கிறதை மறக்கிறவனாயிராமல், அதற்கேற்ற கிரியை செய்கிறவனாயிருப்பவன் பாக்கியவான். யாக். 1:25 , லூக். 11:28.

19. பவுல், **கால்கள் கழுவுதல்** குறித்து 1கொரி. 11அதி. ல் கர்த்தருடைய இராப்போஜன வேளையில் எதுவும் கூறவில்லை, ஆதலால் இந்தச்சடங்கு தேவையில்லை எனக்கூறுவதும் தவறு. கர்த்தருடைய இராப்போஜனம் வேறு சடங்கு, கால்களைக் கழுவுதல் வேறு சடங்கு. கர்த்தருடைய இராப்போஜனம் கர்த்தருடைய மரணத்தை நினைவு கூற ஆகும். ஆனால் கால்களைக் கழுவுதல் சகோதரர்களுக்குள் ஒருவரில் ஒருவருக்கு பங்கு உண்டு என்பதை எடுத்துக்காட்ட ஆகும். கர்த்தர் நீங்களும் ஒருவருடையக் கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள் என்றுக்கூறி, நான் உங்களுக்குச் செய்ததுபோல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன், இவைகளைச் செய்வீர்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள் என்றார். யோ. 13:14-17. ஆதலால் இதை மறுஜென்மமுழுக்கினாலும், ஆவியினாலும் மறுபிறப்பு அடைந்த ஒவ்வொருவரும் கடைபிடிப்பார்கள்.

20. நீங்கள் ஒருவருடையக் கால்களை ஒருவர் கழுவுங்கள் என்று கூறியிருப்பதால், நம்மில் உயர்வு, தாழ்வு; பெரியவர், சிறியவர் என்ற எந்தவிதமான பாகுபாடுமின்றி ஒருவர் கால்களை ஒருவர் கழுவவேண்டும். இது தேவனுடைய குடும்பத்தில் நாம் அனைவரும் சமம் என்ற உணர்வை உண்டாக்கும். கிறிஸ்துவுக்குள் எல்லா அவயவங்களும் சமம். ஆனால் தேவன் அவர்களுக்கு அருளும் வரங்களில் மட்டும் வித்தியாசங்கள் உண்டு.

21. ஒருமுறை இயேசு கிறிஸ்துவின் சீஷர்கள் மத்தியில், அவர்களில் எவன் பெரியவன் என்ற வாக்குவாதம் உண்டாயிற்று. இதை அறிந்த கர்த்தர் அவர்களிடம் உங்களில் பெரியவன் சிறியவனைப் போலவும், தலைவன் பணிவிடைக்காரனைப் போலவும் இருக்கக்கடவன். நான் உங்கள் நடுவே பணிவிடைக்காரன் போல் இருக்கிறேன் என்றார். லூக். 22:23-27. ஆம், கால்களைக் கழுவுதல் அன்பையும், சேவையையும் ஒருங்கேக்கொண்ட ஒரு பணிவிடை ஆகும். இது தேவனோடும், சகல மனுஷரோடும் சமாதானமாகவும், ஒருவருக்கொருவர் ஊழியம் செய்யவேண்டியதற்கும், தாழ்மைக்கும் ஒரு முன்மாதிரி ஆகும்.

22. **கர்த்தருடைய இராப்போஜனம் முடிவடைந்தவுடன், கால்களைக் கழுவுதல் நியமத்தை ஆசரிக்கவேண்டும். யோ. 13:2 ல் போஜனம் பண்ணிக்கொண்டிருக்கையில் என வாசித்து (And supper being ended, or during the supper ), பின்பு யோ. 13:4 ல் போஜனத்தை விட்டெழுந்து (He riseth from supper ) என வாசிக்கிறோம். அதாவது கர்த்தர், கர்த்தருடைய இராப்போஜனத்தை (Lord's supper) விட்டு எழுந்து சீஷர்களுடைய கால்களைக் கழுவித் துடைக்கத் துடங்கினார் எனக் காண்கிறோம்.**

23. **கால்களைக் கழுவுதல் கர்த்தருடைய இராப்போஜனத்திற்கு முன்பு இருக்கவேண்டிய சடங்கு, அதாவது இது கர்த்தருடைய இராப்போஜன பந்திக்கு ஆயத்தச்சடங்கு என்ற உபதேசம் உண்டு. கால்களைக் கழுவுதல் கர்த்தருடைய இராப்போஜனப் பந்திக்கு முன்பு தேவையான பரிசுத்தமாகுதலைக் குறிக்க நியமித்தச் சடங்கு என்கிறார்கள். ஆனால் நாம் கர்த்தருடைய பாடு மரணத்தை நினைவுக்கூர்ந்து, அதினால் உண்டான மனத்தாழ்மையை எடுத்துக்காட்ட, அதினால் நம்மில் ஒருவருக்கு ஒருவரில் பங்கு உண்டு என்பதை எடுத்துக் காட்ட இந்தச் சடங்கை ஆசரிக்கிறோம். இது கர்த்தருடைய இராப்போஜனத்தை ஆசரிப்பதினால் நம்மில் ஒருவருக்கு மேல் ஒருவருக்கு உண்டான பங்கு ஆகும். ஆதலால் முதலில் கர்த்தருடைய இராப்போஜனப் பந்தி, பின்புதான் கால்களைக் கழுவும் சடங்கு ஆசரிக்கவேண்டும்.**

24. இயேசு **முதலாவதாக**: கர்த்தருடைய இராப்போஜனத்தை விட்டு எழுந்தார். **இரண்டாவதாக**: தன் வஸ்திரங்களைக் கழற்றிவைத்தார். ஏன்? **நான் உங்கள் நடுவிலே பணிவிடைக்காரனைப் போல் இருக்கிறேன். லூக். 22:23-27. நிறைவேறுதலாகும்.** இந்நாட்களில் ஐந்துவகை ஊழியத்தில் இருக்கிறேன் என்பவர்கள் பணிவிடைக்காரர்களாக இல்லை, மாறாக எஜமான்களாகவும் முதலாளிகளாகவும் காணப்படுகிறார்கள். ஏனென்றால் இவர்களில் பெரும்பாலானோர் கள்ள கபடமுள்ள வேலையாட்களே. **மூன்றாவதாக**: ஒரு சீலையை எடுத்தார். **நான்காவதாக**: தான் எடுத்த சீலையை அரையிலேக் கட்டினார். **ஐந்தாவதாக**: பாத்திரத்தில் தண்ணீர் வார்த்தார். **ஆறாவதாக**: ஒவ்வொரு சீஷனுடைய கால்களைக் கழுவினார். **ஏழாவதாக**: தாம் கட்டிக் கொண்டிருந்த சீலையினால் சீஷர்களுடையக் கால்களைத் துடைத்தார். **எட்டாவதாக**: தம்முடைய வஸ்திரத்தை மீண்டுமாகத் தரித்துக்கொண்டார். நாமும் இவ்வண்ணமாகவே கால்களைக் கழுவும் சடங்கை ஆசரிப்போம்.

25. இந்த ஒழுங்கு முறைமையை தீர்க்கதரிசி தமது சபையில் எவ்வாறு ஆசரித்தார் என்பதை அவருடையச் செய்திகளிலிருந்து நாம் காண்போம். **போட்டி** என்ற செய்தியில் நீங்கள் 53வது பத்தி தொடக்கத்தைக் கவனித்தால் அங்கு முதலில் இராப்போஜனத்தையும், பின்பு பாதங்களைக் கழுவுதலையும் குறிப்பிடுகிறார். மேலும் நீங்கள் பத்தி 60 மற்றும் 61க்குத் திரும்பினால் அங்கு சபையோருக்கு இராப்போஜனம் கொடுக்கப்படுகிறது. அந்த வேளையில் அடுத்த நியமம் கால்களைக் கழுவுதலுக்கு தண்ணீர் இல்லாதலால் அது குறித்துப் பேசுகிறார். மேலும் நீங்கள் **ORDINATION** என்ற செய்தியில் பத்திகள் 46-102 வரை தியானித்தால், இங்கு கர்த்தருடைய இராப்போஜனத்தில் முதலாவது அப்பம் பிட்கப்படுகிறது. பின்பு திராட்சைரசம் பரிமாறப்படுகிறது. பின்பு **கால்களைக் கழுவுதல்** சடங்கு நடைபெறுகிறது. இவ்வாறாக தீர்க்கதரிசி தம்முடைய சபையில் கால்களைக் கழுவுதலைக் கர்த்தருடைய இராப்போஜனப்பந்திக்குப் பின்புதான் ஆசரித்தார். அவர் முன்மாதிரியின் படியே நாமும் ஆசரிப்போம்.

26. பந்தியை நடத்தும் ஊழியக்காரன் முதலில் எழுந்து, பந்தியில் உள்ள சக ஊழியக்காரன் அல்லது மூப்பர் அல்லது டீக்கன் அல்லது விசுவாசிகளில் ஒருவரை அழைத்துச்சென்று, தன் அரையிலே ஒரு டவலைக் கட்டிக்கொண்டு அவர் கால்களைக் கழுவி, பின்பு தான் கட்டியிருந்த டவலினால் அவரது கால்களைத் துடைக்கவேண்டும். பின்பு அவர் பந்தி நடத்தினவருடைய கால்களைக் கழுவி, அவருடைய கால்களைத் துடைக்கவேண்டும். பின்பு மற்றவர்கள் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவி, துடைக்கவேண்டும். சகோதரர்கள் தனித்தனியாகவும், சகோதரிகள் தனித்தனியாகவும் இந்தச்சடங்கை ஆசரிக்கவேண்டும்.

27. பந்தி நடத்துகிறவர், பந்தியில் உள்ள ஆண்கள் ஒவ்வொருவருடைய கால்களைக் கழுவித் துடைக்க வேண்டும், அவ்வண்ணமாகவே பந்தி நடத்துகிற ஊழியக்காரர் மனைவி பந்தியில் உள்ள பெண்கள் ஒவ்வொருவருடைய கால்களைக் கழுவித் துடைக்கவேண்டும் என்ற உபதேசம் தவறு. ஏனென்றால் கர்த்தர் யோ. 13:14ல் நீங்களும் ஒருவருடையக் கால்களை ஒருவர் கழுவுங்கள் என்று கட்டளைக் கொடுத்துள்ளார். ஆதலால் நாம் ஒருவருடையக் கால்களை ஒருவர் கழுவித் துடைக்கவேண்டும்.

28. யோ. 13:10ல் முழுகினவன் தன் கால்களை மாத்திரம் கழுவவேண்டியதாயிருக்கும்; மற்றபடி அவன் முழுவதும் சுத்தமாயிருக்கிறான் என்று எழுதியிருக்கிறபடியால், கர்த்தருடைய இராப்போஜனம், அதைத் தொடர்ந்து கால்களைக் கழுவுதல் நியமங்களை கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் தண்ணீரில் முழுகி ஞானஸ்நானம் மற்றும் ஆவியின் அபிஷேகம் பெற்றவர்களே ஆசரிக்கலாம். ஏனென்றால் இவர்கள் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலும், தேவனுடைய ஆவியினாலும் கழுவப்பட்டவர்கள், பரிசுத்தமாக்கப்பட்டவர்கள். 1கொரி. 6:11. இவர்கள் தங்கள் அக்கிரமங்கள் நீங்க முற்றிலும் கழுவப்பட்டு, பாவமற சுத்திகரிக்கப்பட்டவர்கள். இவர்கள் ஞானஸ்நானம் பெற்று தங்கள் பாவங்கள் போகக் கழுவப்பட்டவர்கள். இவர்கள் இருதயம் பொல்லாப் பறக் கழுவப்பட்டு இரட்சிக்கப்பட்டவர்கள். இவர்கள் மறுஜென்மமுழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் இரட்சிக்கப்பட்டவர்கள். ஆதலால் ஒருமுறை மறுஜென்மமுழுக்கைப் பெற்றவன் தீத். 3:5 மறுபடியும் முழுகவேண்டியத் தேவையில்லை. ஆதலால் தங்கள் கால்களை மட்டும் கழுவினால் போதும்.

29. கர்த்தருடைய பஸ்கா, கர்த்தருடைய இராப்போஜனம் மற்றும் கால்களைக் கழுவுதல் சடங்குகள் வேளையில் நடந்த சம்பவங்களை வரிசைப்படுத்தித் தருகிறேன்.

அ. இயேசு கற்பித்தப்படியே சீஷர்கள் போய் பஸ்காவை ஆயத்தம் பண்ணினார்கள். சாயங்காலம் ஆனபோது கர்த்தர் பன்னிருவரோடுங்கூட பந்தியிருந்தார். மத். 26:19,20. மாற். 14:16,17. லூக். 22:13,14.

ஆ. பஸ்கா பந்தி நடந்துகொண்டிருக்கையில் சீஷர்களில் ஒருவன் தன்னைக் காட்டிக்கொடுக்க இருப்பதைக் குறித்து கர்த்தர் பேசுகிறார். மத். 26:21. மாற். 14:18.

இ. அப்பொழுது சீஷர்கள் யாவரும் துக்கமடைந்து நானோ? நானோ? என்று ஒவ்வொருவரும் அவரிடத்தில் கேட்க யூதாசும் தன்னைக் குறித்துக் கேட்கிறான். கர்த்தர் அதை ஆமோதிக்கிறார். மத். 26:25. யோ. 13:22-26.

ஈ. யூதாஸ்குள் சாத்தான் புகுந்தான். உடனே அவன் புறப்பட்டுச் செல்கிறான். யோ. 13:27-30.

உ. யூதாஸ் புறப்பட்டுச் சென்றபின்பு கர்த்தருடைய இராப்போஜனம் நடக்கிறது. கர்த்தருடைய இராப்போஜனப் பந்தியில் யூதாஸ் பங்குப் பெறவில்லை. மத். 26:26. மாற். 14:22. லூக். 22:19. யோ. 13:2. யூதாஸ் கிறிஸ்துவின் சரீரத்தில் அவயவமாக இல்லாத ஒரு பாத்திரம். பாருங்கள், அவன் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்துக்குள் வரவில்லை.

ஊ. இவ்வாறாக கர்த்தருடைய இராப்போஜனம் நடந்துகொண்டிருக்கையில், கர்த்தர் போஜனத்தை விட்டெழுந்து சீஷர்களுடையக் கால்களைக் கழுவித் துடைக்கத்தொடங்கினார். யோ. 13:2-5.

எ. முடிவில் ஸ்தோத்திரப் பாட்டை பாடிய பின்பு அவர்கள் ஒலிவ மலைக்குப் புறப்பட்டுப் போனார்கள். மத். 26:30. நாமும் அவ்வண்ணமாகவே கர்த்தருடைய இராப்போஜனம், கால்களைக் கழுவுதல் சடங்கு முடிந்தவுடன் ஸ்தோத்திரப் பாட்டுப் பாடி, பந்தி நடத்துகிறவர் சபை மக்களை ஆசீர்வதிக்க, பின் சபை கலைந்துச் செல்லலாம்.

30. சகோதரர்களே, நான் **கால்களைக் கழுவுதல்** நியமம் குறித்துச் சுருக்கமாய் உங்களுக்கு எழுதின புத்திமதியான வார்த்தைகளை நீங்கள் பொறுமையாய் ஏற்றுக்கொண்டு அதன்படி நடக்கவேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன்.

கிருபையானது உங்களனைவரோடுங்கூட என்றென்றைக்கும் கர்த்தருடைய வருகைப்பரியந்தம் இருப்பதாக. ஆமென்.

மார்ச், 2001

கிறிஸ்துவின் அன்பில்,

**சகோ. காலேப் யோசுவா.**